சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 01.07.2025 SC. 17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அசா 8 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கம்பம் புதுப்பட்டி அருகே கோசந்திர ஓடையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.05.2020 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் கம்பத்தில் இருந்த போது எனக்கு கல்யாணக்குமார் என்பவர் போன் மூலமாக என்னிடம் பிரச்சனை வந்து அப்பாவை குத்திவிட்டார் என்று கூறினார். உடனடியாக நானும் என் மனைவியும் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டோம். நான் சென்று பார்க்கும் போது என் மாமனார் தங்கராஜ் காயப்பட்டு கிடந்தார். அவரை என் மைத்துனரும், மற்றொரு பையனும் கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் என் மனைவியும் பின்னார் சென்றோம். அதன் பின்னர் அங்கு என் மாமனார் அபாயகரமான நிலையில் இருந்ததால் தேனி கவிலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். தேனி அரசு மருத்துவமனையில் போலீசார் விசரிக்கும் போது இடப் பிரச்சனைக்காக எனது மாமனாரை குத்தியதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும்.

<u>குறுக்கு விசாரணை.</u>

என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் க.விலக்கு அரசு மருத்துவமனையிலும், கம்பத்திலும் விசாரித்தார்கள். என் மாமனார் அவசர சிகிச்சை பிரிவியில் இருந்ததால் ஒரு வாரம் கழித்து நார்மல் வார்டுக்கு மாற்றிய பிறகு என்னையும் எனது மாமனாரையும் விசாரித்தாகள். போலீசார் என்னை விசாரிக்கும் போது சம்பவ இடத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றதாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். சம்பவ இடத்தில் சென்று நான் 5 நிமிடம் நான் இருந்தேன். நானும் என் மனைவியும் சம்பவ இடத்திலிருந்து மருததுவமனைக்கு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லாமல் தற்சமயம் நீதிமன்றத்தில் புதிய சங்கதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இரத்தம் கிடந்ததா என்றால் என் மாமனார் வயிற்றில் வெள்ளை துணி வைத்து கட்டி இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது வீட்டிற்குள் இருந்து வெளியே என் மாமனாரை தூக்கிக்கொண்டு வந்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்திற்கு நானும் என் மனைவியும் செல்லவில்லை என்றும், காயம் பட்ட நபர் என் மாமனார் என்பதால்

அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி அசா 1 முதல் 3 சாட்சிகள் நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்)M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 01.07.2025 SC. 17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரியா | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அசா 9 | | | |

---

முதல் விசாரணை

நான் கம்பம் புதுப்பட்டி அருகே கோசேந்திர தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.05.2020ம் தேதி மதியம் 2.30 மணியளவில் என் தம்பி கல்யாண குமார் போன் மூலமாக அப்பாவை குத்திவிட்டதாக கூறினார். உடனடியாக நானும் எனது கணவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். என் அப்பா குத்துப் பட்டு இரத்தமாக இருந்தார். உடனடியாக ஒரு துணியை எடுத்துக்கட்டிவிட்டு என் தம்பியும், பார்த்தசாரதியும் கம்பம்அரசு மருத்துவமனைக்கு என் தந்தையை அழைதது சென்றார்கள். நானும் எனது கணவரும் பின்னால் மருத்துவமனைக்கு சென்றோம். என் தந்தைக்கு மிகவும் அபாயகரமான நிலையில் இருந்ததால் அவரை கவிலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நிலம் சம்மந்தமாக ஏற்கனவே பேசி முடித்து அதற்கு பின்னர் தான் வீடு கட்ட ஆரம்பித்தார்கள் என்றும், அதனால் எதிரிகள் என் தந்தையை குத்தியதாக என்னிடம் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தாக்ள்.

குறுக்கு விசாரணை

என் அப்பாவை முதன் முதலில் நான் பார்க்கும் போது அவரை வீட்டிற்குள் இருந்து தான் தூக்கிவந்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக யார் எங்கு புகார் கொடுத்தார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. என் தந்தை அபாயகரமான நிலையில் கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்தார் என்ற விபரத்தை இன்று தான் சொல்கிறேன். நிலப் பிரச்சனையை ஏற்கனவே பேசி முடித்த பின்னரும் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள் என்ற விபரத்தையும் இன்று தான் சொல்கிறேன். நானும் எனது கணவரும் என் தந்தையை மருததுவமனைக்கு அழைத்து செல்ல அவரை தூக்கினோம். அப்பொழுது என் மீதும் என் கணவர் மீதும், என் தம்பி மீதும் இரத்தம் பட்டதா என்றால் துண்டை வைத்து கட்டினோம். மீண்டும் சிறிதளவு இரத்தம் பட்டது. அசா 1 முதல் 3 சாட்சகிள் நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லவில்லை என்றும், நான் புதிய சங்கதியை இன்று நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்